சங்கரத்தை பிட்டியம்பதி

# வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய

# தோத்திரத் திரட்டு



வெளியீடு : 10.04.2017

தீர்த்தோற்சவத்தின் போது

ஆலய அறங்காவலர்களால் வெளியீடு செய்யப்பெற்றது.



# வெளியீட்டுரை

பாலிற் செறிந்த பிட்டியம்பதியில் எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈர்ந்து அருள்பாலிக்கும் வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் மீது பிரம்ம ஸ்ரீ கணபதி ஐயர் அவர்களால் பாடப்பெற்று 1939ம் ஆண்டு சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினரால் முதன்முதல் அச்சு வாகனம் ஏற்றப்பட்ட அம்பாளின் பதிகங்கள் திருவூஞ்சல் என்பனவும் 2002ம் ஆண்டு இயலிசை வாரதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் இயற்றிய பாடல்களும் மீள்பதிப்பு செய்யப்படுவதுடன் அம்பாள் மீது நாகலிங்க சுவாமிகள் ஆசிரியர் துரைச்சாமி ஆகியோரால் அருள்வேண்டிப் பாடப்பெற்ற பாடல்கள், கௌரிக் காப்பு மற்றும் அம்மன் ஸ்தோத்திரங்களும் ஒரு நூலாக பதிப்பிப்பதில் ஆலய அறங்காவலராகிய நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இக்கைங்கரியம் திருக்கேணியானது தீர்த்தக் கேணியாக மாற்றம் செய்யும் 10.04.2017ம் இந்த நன்நாளில் கைகூடுவதற்கு அம்பாள் அருள் புரிந்துள்ளார்.

**- ஆலய அறங்காவலர்கள்**

# சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஆலயத்தின் வரலாறும் சிறப்புக்களும், வழிபாட்டு முறைகளும்

யாழ்ப்பாணத்தின் வலி-மேற்கு பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய சிற்றூர் சங்கரத்தை. அவ்வூரின் மேற்குப் பகுதியில் நெல்வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் புண்ணிய தலத்திலே பத்திரகாளியம்மை வீரபத்திரர் சமேதராக கோயில் கொண்டு அடியார்களிற்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார்.

பிட்டியம்பதி என்பது பூர்வத்தில் இருமருந்துய்ய முதலியார் பரம்பரையில் வந்த பெருமையினாரின் குமாரர் முதன்மையினார் என்பவரிற்கு உரியது. அவ்விடத்தில் உண்டாகி இருந்த புளியமரத்தில் அமர்ந்திருந்து கிளிகள் அயலில் உள்ள நெல்வயல்களில் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையைச் சேதப்படுத்துவதை கண்ணுற்ற முதன்மையினார் அக்காலத்தில் (1678) வட்டுக்கோட்டை கிறிஸ்தவ தேவாலய அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த தச்சுத் தொழிலாளியை அழைத்து அப்புளியமரத்தைத் தறிக்கும்படி ஏவினார். அதற்கு அவர் மறுப்பு தெரிவிக்கவே தாமே அதனைச் செய்ய முனைந்தார். அப்போது அம்மரத்தினடிப் புற்றுக்குள்ளிருந்து வெளிப்பட்ட நாக சர்ப்பம் அவரைத் துரத்திச் சென்றது. சிறிது தூரம் சென்றதும் பாம்பு தலைதூக்கி ஆடி நிற்பதைக் கண்ட அவர் தம் தவறைப் பொறுத்தருளும்படி தம்முட் பிரார்த்தித்து தமது இருப்பிடத்துக்குச் சென்றார். அன்றிரவே அம்மையார் முதன்மையானரின் சொப்பனத்தில் தோன்றி நமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்தார். அடுத்தநாளே அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத் தொடங்கினார். அம்மரமே இன்றும் தலவிருட்சமாக வியாபித்து நிற்கின்றது. அவரின் வழித்தோன்றல்களே அன்றில் இருந்து இன்றுவரை பூசகர்களாகவும் அறங்காவலர்களாகவும் இருந்து வருகின்றனர். இது கன்ன பாரம்பரியமான கதை.

பிட்டியம்பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டியம்பதி பத்திரகாளியம்மை என்ற நாமம் அம்பாளிற்கு ஏற்பட்டது. புளியமரத்தடியில் கதிரை ஒன்றை வைத்து அதனை வீரபத்திரக் கடவுளுக்குரிய ஆசனமாக மனத்தின்கண் நினைத்து வழிபட்டு வந்தனர். அம்பாளின் அற்புதங்களால் கவரப்பட்டு அயற்கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து வழிபடத் தொடங்கினார்கள். இங்கே திராவிட முறைப்படி பூசைகள் நடைபெற்று வந்ததுடன் பொங்கி மடையில் உயிர்ப்பலி (ஆட்டுக்கடா, சேவல்) கொடுத்தல் போன்ற வைபவங்களும் நடைபெற்று வந்தன.

சிறுகுடில் அமைத்து வழிபடத் தொடங்கிய இவ்வாலயம் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கற்பக்கிரகமும் பிள்ளையார், வைரவர் என்றும் பரிபார தெய்வங்களிற்கும் மண்டபங்கள் அமைக்கப்பெற்று கற்கோயிலாக மாறியது. மூலஸ்தானத்தில் பிரதிட்சை செய்யப்பட்டுள்ள விக்கிரகங்கள் அக்காலத்தைச் சேர்ந்தவை. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடியேற்றத்துடன் தொடங்கி பத்தாவது நாளான பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இன்று எழுந்தருளி விக்கிரகங்களாக உள்ள அம்மையப்பர் விக்கிரகங்கள் 1880ம் ஆண்டு அப்போதைய ஆலய அறங்காவலரான வீரபத்திரர் கதிரவேல் என்பவரினால் அமைக்கப்பட்டன.

1947ம் ஆண்டு ஆலய அறங்காவலர்களும் ஊர் மக்களில் சிலருமாக சேர்ந்து உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்தினார்கள். இதே ஆண்டு நந்திதேவர் பிரதிட்சை செய்யப்பட்டார். உயிர் பலி கொடுப்பது திராவிட பூசை முறையில் ஓர் அங்கமாக விளங்கியதால் இன்றும் பூசைகள் நடைபெறும் போது பலி கொடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் யாவற்றிலுமே நீத்துக்காய் வெட்டி பலி கொடுக்கப்படுகின்றது. ஆனாலும் இன்றும் பக்தர்கள் தமது நேர்த்திக்காக சேவல்களையும் கடாக்களையும்

கோவிலுக்குக் காணிக்கையாகச் செலுத்துவதை வழமையாகக் கொண்டுள்ளனர். இவ்வாண்டிலேயே கோவில் ஆகம விதிகளுக்கு அமைவாக அமைக்கப்பட்டது.

1978ம் ஆண்டு சித்திரத் தேர்கள் செய்து வெள்ளோட்டம் நடைபெற்றது. 1985ம் ஆண்டு திருத்த வேலைகள் நடைபெற்று வைகாசி புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988ம் ஆண்டு நவக்கிரக மண்டபமும் 1989ம் ஆண்டு சண்டேஸ்வரர் மண்டபமும் அமைக்கப்பட்டன. 1987ம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரமும் 1995ம் ஆண்டு வீரபத்திரர் மண்டபமும் திருத்தி அமைக்கப்பட்டன. 2001ம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று ஆவணி ரோகினி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2002ம் ஆண்டு வசந்த மண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2003ம் ஆண்டு மாசி மாதம் தெற்குப் புறத்தில் மூன்று தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

2007ம் ஆண்டு சித்திரை மாதம் பிரதான வாயில் பஞ்சதள ராஜகோபுரம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2010ம் ஆண்டு மேற்கு வாயில் இராஜகோபுரமும் ஆஞ்சநேயர் மண்டபமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2012ம் ஆண்டு ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு சித்திரை மாதம் 12.05.2012இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது 10.04.2017இல் திருக்கேணியானது தீர்த்தக் கேணியாக புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு பங்குனி மாத அர்த்த நட்சத்திரத்தில் நடைபெறுகிறது.

வளரும்...

- ஆலய அறங்காவலர்கள்

உ

திருச்சிற்றம்பலம்



யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை - பிட்டியம்பதியில்

கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்

பத்திரகாளியம்மைசமேத வீரபத்திரக்

கடவுள் பேரில்

# தோத்திரப் பாடல்கள்

இவை

சங்கரத்தை இந்துவாலிப சங்கத்தாரால்

வெளியிடப்பட்டன

சங்கானை

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற், பதிப்பிக்கப்பட்டது.

1939

# 1939ம் ஆண்டு பதிப்பிலிருந்து...
# முகவுரை

நான்முகக் கடவுளுக்கு மகனாகிய தக்கன் நெடுங்காலமாகச் சிவபெருமானை நோக்கிக் கொடுந்தவம் செய்து பல வரங்களைப் பெற்றான். அவனுக்கு நிறைந்த செல்வமும், அதிகாரமும், கீர்த்தியும் உண்டாயின. உமாதேவியார் அவன் தவப்பயனால், அவனுக்கு மகளாகத் தோன்றினார். சிவபெருமான் அவரைத் திருமணம் செய்தலாகிய ஓர் திருவிளையாடலையும் நடத்திக் காட்டினார்.

பின்பு அவனுக்கு அகங்காரம் உண்டானது. சிவபெருமானை மறந்தான் அதுமட்டோ! அவரையும், உமாதேவியாரையும், நிந்தித்து வெறுத்தான். அவர்களை விலக்கி ஓர் வேள்வி செய்யத் தலைப்பட்டான்.

பெருங்கருணையாளராகிய சிவபெருமானும், உமாதேவியாரும் அவனைத் தண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்த எண்ணியருளினார்கள். சிவபெருமான் தனது கூறாக, வீரபத்திரக்கடவுளையும் உமாதேவியார் தமது கூறாகப் பத்திரகாளியம்மையையும் தோற்றுவித்துத் தக்கனுடைய வேள்வியையுமழித்து அவன் அகங்காரத்தையும் நீக்கும்படி கட்டளைசெய்து அனுப்பினார்கள்.

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியம்மையுஞ் சென்று, தக்கன் வேள்வியை அழித்து தக்கனையும் அவனோடுசேர்ந்த தேவர்களையும் மறக்கருணையினாற் றிருத்தி நல்வழிப்படுத்தினார்கள். இதுவே வீரபத்திரக் கடவுளினதும், பத்திரகாளியம்மையினதும் தோற்றமாகும்.

ஆகவே வீரபத்திரக் கடவுளும், பத்திரகாளியம்மையும், சிவபெருமானும் உமாதேவியாருங் கொண்ட அருள் மூர்த்தங்களேயாம் என்று கடைப்பிடித்து உணர்ந்துகொள்ள வேண்டும். அது நிற்க,

பல நூற்றாண்டுகளுக்கு முன் வட்டுக்கோட்டையைச் சார்ந்த சங்கரத்தை என்னும் ஊரில் பிட்டியம்பதியென்னுந் தலத்தில், வீரபத்திரக் கடவுளும், பத்திரகாளியம்மையும், திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து, அடியார்களுக்கு நல்லருள் பாலித்து வருகிறார்கள். சங்கரத்தையிலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் இருக்கின்ற சனங்களுக்குக் குலதெய்வங்களாக இவர்களிருந்து அருள்செய்து வருவது, யாவரும் அறிந்த உண்மை.

இத்தலத்திலுள்ள வீரபத்திரக் கடவுள்பேரிலும், பத்திரகாளியம்மை பேரிலும் அவ்வூரிலிருந்தவரும் வரகவியுமாகிய பிரம்மஸ்ரீ கணபதிஐய ரவர்களால், பதிகங்களும், பத்திரகாளியம்மை பேரிற் திருவூஞ்சலும் பாடப்பட்டன. திருவூஞ்சல் இப்பொழுதும் இருக்கின்றது, பதிகங்கள் மறைந்துவிட்டன, அவற்றைத் தேடி அச்சிட்டு வெளிப்படுத்த முயன்றும் பயன்படவில்லை. வாய்பாடமாகச் சில முதியார் சில பாடல்கள் சொல்லுகிறார்கள். அவைகளும் மிகப் பிழை பொருந்தன வாயிருக்கின்றன.

வீரபத்திரக் கடவுளையும், பத்திரகாளியம்மையையும் வழிபடும் அடியார்களின் பொருட்டு, தேவாரம் முதலிய சில தோத்திரப் பாடல்களையும் பதிகத்திற் பிழையில்லையென்று கண்ட இரண்டு பாட்டையும் எடுத்து இப்பொழுது அச்சிடுவித்து வெளிப்படுத்துகின்றோம். பதிக ஏடு வைத்திருப்பவர்கள் அதனை எமக்கு, உதவுவார்களாயின், மிக நன்றியறிதலுடன் ஏற்று, அச்சிடுவித்து வெளிப்படுத்துவோம். இப்பதிப்பில் தோத்திரப் பாடல்களும், திருப்பதிகத்து இரண்டு செய்யுட்களுமன்றிப் திருவூஞ்சலும், பிட்டியம்பதிக் கோயில் வரலாறும் அடங்கியுள்ளன.

இங்ஙனம்,
சங்கரத்தை
இந்து வாலிப சங்கத்தார்

உ
கணபதி துணை

# வட்டுக்கோட்டைப் பிட்டியம்பதி பத்திரகாளியம்மை

# ஊஞ்சல்

## காப்பு

திருமருவு வாணியிந்த் ராணி தாமுந்
தினம்பரவப் பிட்டிநக ரதனின் மேவும்
உருமருவு மாதிபத்ர காளி மீதில்
உசிதமது ரத்தமிழி லூஞ்சல் பாட
மருமருவு மிதழிமதி யரவஞ் சூடும்
வள்ளல்பங்கின் மருவுகிள்ளை வசனி யீன்ற
கரு மருவு மதவதனப் புரிவெண் கோட்டுக்
கணபதிகிங் கிணிச்சரணங் காப்புத் தானே, (க)

(நிவேதனம் : நெய்ச்சாதம், அகுபனபாணக்கம், கரும்பு, அரியதரம், படுதரம்)

மாமலிமா ணிக்கரத்நத் தூண் நாட்டி
மரகதமா மெழில்பெறுநற் சட்டம் பூட்டி
பூமலிசந் திரகிரண வடங்கள் கோத்துப்
புருடரா கத்தினுறு பலகை சேர்த்து
பாமலிசக் கரவூஞ்சன் மிசையே மேவிப்
பாரதிசீர் படிக்கவிந்த்ரை வடந்தொட் டாட்ட
தாமமணி குழலணங்கே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீரூங்சல் (உ)

(நிவேதனம் : பரும்புச்சாதம், சீடை, மாம்பழம், பால், கற்கண்டு)

மங்கலமார் கங்கைதங்கை கவரி வீச
மடப்பிடி நேர்நடைச்சசிபொன்னடைப்பை தாங்கத்
தங்கரத்நக் கொடிகுடைகா ளிகள்கொண் டாடத்
தவிலடித்துக் காளிகள்சன் மினிகள் வாழ்த்தப்

புங்கவர்மங்கையர்களாலத்தி யேந்தப்
பூசுரர்மா முனிவர்மலர் சொரிந்தே போற்றச்
சங்கமுத்து வடமசைய ஆடீ ரூஞ்சல்.
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல்.

(நிவேதனம் : சுத்தான்னம், பிட்டு, பழம்)

கொத்துமுத்துக் குப்பிதொங்கல் குறங்கி னாடக்
கொப்பினொடு குழைகளுமொப் பிதமா யாட
பத்திவைத்துக் கொத்துசித்திரப் பணிக ளாடப்
பருத்தமணி திருத்துதப் பணியுமாட
வித்தகஞ்சே ரணிகளொடுத் தரிய மாட
மின்னிடையிற் பொன்னிடுமே கலைக ளாடச்
சத்திபரி புரங்குலுங்க வாடீரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீரூஞ்சல் (ச)

(நிவேதனம் : புளியோரை, தேன்குழல், தேன், தோடம்பழம்)

அத்திமுகத் துத்தமனுஞ் சுத்தனான
வாதிவயி ரவதேவ சுவாமிதானும்
சித்திரமெத்தியவீர பத்ர தேவுஞ்
கிந்தைமகிழ்ந் தேமருங்கிற் சிறந்து மேவப்
பத்திவைத்துத் தொண்டரண்டர் புகழைச் சாற்றப்
பாட்டினிசை காட்டிமுனி வோர்கள் போற்ற
தத்தையொத்த மொழியணங்கே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். (ரு)

(நிவேதனம் : கடலைச் சுண்டல், மிளகுசாதம், தோசை, வெண்ணெய், பலாப்பழம்)

அக்கணிந்தா னக்கனென வகந்தையாலே
　　அரனை யிகழ்ந் தயன் மகன் முன்னமரர்யாரும்
பக்கமுற மக்கண்மரு மக்கள் கூடப்
　　பண்ணுமக மழித்தபிரான் பாகம் மேவ
செக்கர்நிறச் சடைச்சிபிடி நடைச்சி யேயுன்
　　திருக்கடைக்கண் ணருள்செயென்று செகத்தோர்யாரும்
தக்கவிரு பதந்துதிக்க வாடீரூஞ்சல்
　　சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல்

நிவேதனம் : வடை, பாயசம், வழைப்பழம், நெய்)

குளக்கரையி னிழுற்க முகிற்றாவி வாளை
　　குடித்தமிர்த மெனச்சொரிந்து குளிர்ந்த தேன்கள்
வளப்பழனத் திடைபெருகப் பயிருண்டாகும்
　　வட்டுநகர்ப் பிட்டிதனின் மகிழ்ந்து கூடி
உளத்தினெணித் துதியடியார் பார்மே லென்றும்
　　ஓங்குபுகழ் தாங்கியருட் செல்வ மேவித்
தழைக்கவருள் புரிந்திருந்தே யாடீ ரூஞ்சல்
　　சக்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். (எ)

(நிவேதனம் : தேன்சாதம், அட்டம், மாதுளம்பழம்)

கருங்கடல்போ னிறமாயன் கமலப் புத்தேன்
　　கற்பகத்தின் னறுமலருன் பகத்திற்றாவி
மருங்கிலெங்கு நெருங்கிநின்றே யாசி கூற
　　மாந்தர்கள்முற் போந்ததிக வளங்கள் கூற
வருங்கவிஞர் மதுரசுவைக் கவிகள் பாட
　　மத்தளதா ளத்தினொலி மல்கிநீட
தருங்கருணைச் சமுத்திரமே யாடீ ரூஞ்சல்
　　சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். (அ)

(நிவேதனம் : தயிர்ச்சாதம், நீர்மோர், மோதகம், சுண்டல், மாம்பழம், பயறு)

மதுரகவிப் புலவரிசைத் தமிழைப் பாட
　　மருந்துமொழி திருந்திழையார் மகிழ்ந்து நாட
இதமலர்கள் சொரிந்தடியார் சரணஞ்சூட
　　எண்ணரும்விண் ணவரருள்செ யென்றேநாட
விதுவதனக் காளிகள்வந் தணிகள் தேட
　　வேதியர்தோத் திரநாத மிகுந்தே நீட
சதுரவித ரணமயிலே யாடீ ரூஞ்சல்
　　சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். (க)

(நிவேதனம் : பாற்சாதம், பாலுரட்டி, பேரீச்சம்பழம், நெய்)

## வாழி

ஆரணங்கள் வாழிசிவா கமங்கள் வாழி
　　அரியமறை வைதிகசை வங்கள் வாழி
காரணமா மனுமுறைக ளினிது வாழி
　　காலிநிரை வாழிபத்ர காளித் தாய்க்குத்
தாரணியி லூஞ்சல்செய்வித் துவந்து போற்றுஞ்
　　சற்குணவுத் தமர்களெலாந் தழைத்து வாழி
ஏரணியும் பிட்டியெனும் பதியும் வாழி
　　யிசைந்திடுமூஞ் சற்றமிழும் வாழிதானே.

(நிவேதனம் : குழலன்னம், அதிரசம், இட்டலி, தாம்பூலம், பூகபழம், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம்)

முற்றிற்று.

## வீரபத்திரர் பதிகம்

அக்குமணி மிக்கசெக் கச்சடையு
முக்கண்ணு மாயிரங் கமலமுகமும்
அணிமணிக்குண்டலங் குழைகளுங் குலமலையினழு
கொழுகு கனகபுயமும்
தொக்குயர் படைக்கலக் கைகளும்
மார்பிற்றுலங்கு செம்பொன் னாரமும்
சுருதியுங் கருதரியபரிபுர பதங்களுந்
தோன்ற வந்தெனை யாளுவாய்
தக்கனொடு மக்கள் மருமக்கள் பக்கத்திலுறை சதுர் முகன்
முதல் வானவர் தங்கள் கருவங்களதி பங்கம் படச் சிவன்
தலைமை நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையும் சாலையும் பாலிற் செறிந்த பிட்டிப்
பதியில் வாழ் சித்திரவலங்கார பத்திரகாளிக்கன்பு திகழ்
வீரபத்ர குருவே.

## பத்திரகாளி அம்மன் பதிகம்

திருமருவு பரமசங்கர கிருபாகரவரத
திரிபுராந்தக பகவனைத்
திடமனத்துடனன்று வடவனத்தினின்று
சேர்ந்து வாதாடி யோடி
உருமருவு மண்டல மோடண்டர் பயில்
எண்டிசைகள் உயரண் டரண்டமுழுதும்
உன்னியெழு கோரி மாவீரி
சடையன் பாரி உயரி ரீங்காரி சூரி
மருவுருவு சடிலதரகாளி கங்காளி
சர்வாணி மாதங்கி சூலி மதமகிட
சங்காரி வீரஸ்ருங்காரி நெடுவாரி சூழ்பாரினிலவும்
தருமருவு பிட்டிநகர் உறையுமொரு கௌரியே
தயவு வைத்தெனை யாளுவாய்
சத்தியுத்தமி சித்திரமெத்து வித்தகி நித்திய
சக்தி பத்திரகாளியே அம்மையே.

# கப்பல் பாட்டு

## பத்திரகாளி அம்பாள் துதி

பீடு மிகவுடையாள் பிட்டியம்பதி யுறைவாள்
சாடும் வினைககள் தகர்த்திடும் சால்புடையாள் தக்கன்செய்
மமதை வேள்விதனை மாய்த்திடும் மதிநலத்தாள்
மாண்புடையாள் மலர்த்தாள் சரண்

## கப்பற் பாட்டு

ஏலையெலோ தத்தையா ஏலையெலோ

01. வெய்யகன லோங்கி நிற்காரியம் பார்க்க
வெம்மறலி பாஞ்சாலி ஆஞ்சான் பிடிக்க
துய்யகுண மாரீசன் சுக்கான் பிடிக்க
சொல்லரிய ஈசனும் ஆட்கணக் கனாக
பதுமனையில் இந்திரன் கற்புநிலை பார்க்க
வெற்றிசை வர்ணனும் வெம்பாவே சாம்ப
ஐயமிலா இருதூவி ஓடலி யாக
அகலவதி கலாசுன்னன் கலாசுன்னன் ஆக
மயில்மேவும் மலைமேவும் ஆகாசக் கடலில்
வடிவுள்ள பாய்விரித் தோடுதே கப்பல்

(ஏலையெலோ)

02. பஞ்ச பூதப்பலகை கப்பலாய்ச் சேர்த்துப்
பாங்கான ஓங்காரப் பாய்மரம் நாட்டி
நெஞ்சு மனம் புத்தி அகங்காரம் சித்தம்
மானாபி மானமும் கயிறாகச் சேர்த்து
ஐந்தெழுத்தைக் கட்டிச் சரக்காக ஏற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கான் நிறுத்தி

நெஞ்சுக் கடாட்சத்தால் சீனிப்பாய் தூக்கி
சிவனுடைய திருப்பொருளைச் சிந்தையில் நினைத்து
தஞ்சல் ஆனந்த வெள்ளத்தில் தானே
போகுதடா ஏகரதம் சர்வரதம், பிரம்மரதம்
(ஏலையெலோ)

03. களையையுங் கோளையுந் தள்ளடா தள்ளு
கருணைக் கடலிலே தள்ளடா கப்பல்
நிர்க்குணந் தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்த பரிபூரணத்தால் தள்ளடா கப்பல்
திக்குத் திசையெங்குந் தள்ளடா தள்ளு
திருமந்திரஞ் சொல்லித் தள்ளடா கப்பல்
முக்கண்ணை மூன்றையுந் தள்ளடா தள்ளு
முப்பாலுக் கப்பாலே தள்ளடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலுந் தள்ளடா தள்ளு
பரவெளிக் கப்பாலே போகுதடா கப்பல்
(ஏலையெலோ)

04. வீரபத்திர சுவாமியவர் வீரவாள் ஏந்த
படைபத்ர காளியம்மை பாணந் தொடுக்க
தக்கனதும் எச்சனதும் தலைசரிந்து வீழ
அவியுண்ட தேவர்களும் அலறியே ஓட
விண்பட்ட பூதங்கள் புண்பட்டு ஓட
தலையறுந்த தக்கனுமே தகராகக் கத்த
அலைமகளும் கலைமகளும் வெற்றியிசை பாட
மலைமகளாம் பார்வதியும் மலர்மாரி சொரிய
வட்டூரில் வனிதையர்கள் வரவேற்பு நல்க
வழிவழியாய் அடியார்கள் அம்மைபுகழ் பாட
புளியமரம் வளர்ந்தோங்கும் பிட்டிநகர் நோக்கிப்
பிரியமுடன் கப்பல் வந்து சேர்ந்ததையா சுவாமி
(ஏலையெலோ)

# பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள்
# ஆரத்திப் பாடல்

(ஜெய ஜெயஜெய சக்தி என்னும் ஆரத்திப் பாட்டு மெட்டு)

இராகம் : மத்தியமாவதி　　　　தாளம் : ஏகம்

01. மங்கலம் தந்தருள்வாய் - அம்மா
எங்கள் குலத்தாயே
பொங்கிடும் இன்பம் வாழ்வினில் என்றும்
தங்கிட அருள்தாராய் - அம்மா
வந்தெமைக் காத்தருள்வாய்

02. வளமிகு வயல்சூழ் பிட்டியம் பதியில்
வரம்பல ஈந்திடவே வீர
பத்திரர் பாங்கினிலே
திருவளர் தேவி பத்திர காளியாய்
சிறப்புடன் வீற்றிருப்பாய் - எங்கள்
சிந்தை நிறைந்தவளே

(மங்கலம்)

03. ஆய கலைகளை அள்ளி வழங்கிடும்
ஆதி பராசக்தி அம்மா
ஆதி பராசக்தி நீ!
தூய மனதுடனே தூமலர் தூவி
துதித்தோம் துணை வருவாய் - நாளும்
துதித்தோம் துணை வருவாய்

(மங்கலம்)

04. மேள தாளங்கள் எங்கும் முழங்கிட
மெட்டி குலுங்க வாராய் - அம்மா
மெட்டி குலுங்க வாராய் - எமை
ஆளுந் தாயே உந்தன்
அலங்காரக் கோலம்
ஆனந்தம் ஆனந்தமே என்றும்
ஆனந்தம் ஆனந்தமே

(மாங்கலம்)

05. மாங்கல்யம் பூணும் நந்நாள் - இந்நாள்
மாதேவி எழுந்தருள்வாய் - எம்முன் (மாதேவி)
பாங்குடன் எங்கள் செல்வியின் வாழ்வில்
பலமெலாம் ஊட்டிடுவாய் - சகல
நலன்களைக் கூட்டிடுவாய் - சகல

(மாங்கலம்)

- திருமதி. அருணாசலம்



# பத்திரகாளி அம்மை பாடல்கள்

01. எந்தநாளும் உந்தன் பாதக் கமலத்தையே இருதயத்தில் பதித்து
இருவாட்டி செண்பகம் மருது மல்லிகையுடன்
இனிய ரோஜா கதம்பம் செந்தாமரை பிச்சி முல்லையொடு
கஸ்தூரி செவ்வந்தி மாகொன்றை வில்வம்
சிறிதும்ப மலராத்தி அர்ச்சித்துத் தினந்துதித்திடும்
அன்பனை வந்தாள வேண்டுமே வடபத்திர காளியே
வாள் வில்லு திரிசூலம் அக்கினிப் படையுடன்
வரவேண்டும் அம்மா
சிந்தா குலம்கொண்டு திரியநான் வசமோ
தினந்தினம் சொல்ல வேண்டுமோ தேவி, திரிசூலி
கபாலி வடபத்திரகாளி நீ எனக்கு அருள் புரிவாய்
நந்தா உறையும் நங்கையே பிட்டிநகர் உறையும் கௌரியே
நடனமிடும் காளியே எம்மைச் சோதனை செய்யவோ
எங்கள் குலதெய்வமாய் வந்தமர்ந்தீர் தாயே
வடபத்திரகாளி அம்மையே!

02. அண்டங்கள் புவனங்கள் அத்தனையும் தாமாகி
அரி அயன் உருத்திரனுமாய்
ஆதியாய் பிரணவ சொரூபியாய்
உலகுக்கோர் அன்னையென வந்த தாயே குண்டலினி சக்தியே
உலகுய்ய உண்மைநிலை கொடுத்தருளும் ஓம் சக்தியே
குஞ்சர முகற்கிளைய கருணையாம்
முருகனைக் கொடுத்தாண்ட பரதெய்வமே
கண்டத்தில் கொடுவிஷம் உண்ட அரன் பாகியே
காம சிவகாமபீடம் கைலாயமாம்
பிட்டிநகர் உறையும் கௌரியே
காட்சிதந்து அருளும் அம்மா

வந்தாளவேணும் வடவனத்தில் நின்று
ஆடும் காளியே வரவேணும் இது சமயமே
வடபத்திரகாளி அம்மையே

03. ஆங்காரி ரீங்காரி ஓங்காரி என்றுமே அள்ளி நீறிட்டவுடனே
ஆடாத மாடனும் முனியும் கறுப்பனும் ஆடுமே
இருளு பின்னும் வாங்கியே ஆடுமே
வருகின்ற பேய் பெல்லி மாறாத சன்னிதோஷம்
வஞ்சனைகள் சூனியம் பெல்லிப் பசாசுகள் விட்டுப் பறந்தோடுமே
நீங்காமல் உனது சன்னதி தன்னில்
அடியார்கள் நித்தமும் தொழுது ஏத்தும் மதியே
நீலி! திரிசூலி! கபாலி! காமாட்சி!
வடபத்திரகாளி நீ எனக்கு அருள்புரிவாய்
பாங்கான பிட்டியம்பதி தன்னில்
பதிந்திடும் பத்திரகாளியே அருள் புரிவாய்!

04. பாரெலாம் துதிபெற்ற உனக்குப் பாதவிரல் மோதிரம்
பாடகம் தண்டை கொலுசும்
பச்சை வைடூரியம் இச்சையாய் இளைத்திட்ட
பாதச் சிலம்பின் ஒலியும்
முத்து மூக்குத்தியும் இரத்தின பதக்கமும் மோகனமாலை அழகும்
முழுதும் வைடூரியம் புஷ்கராகத்தினால்
முடிந்திட்ட தாலி அழகும்
அந்தரி திகம்பர பரம்பரை மனோன்மணி
ஆதியாய் நின்ற உமையே
அழகான பிட்டியம்பதி தன்னில்
புகழாக அமர்ந்திடும் அம்மை சக்தி
பத்திரகாளி உமையே.

05. சித்தி சுந்தரி கௌரி அம்பிகை க்ருபாநிதி
சிதம்பரி சுந்தரி பரசிற்பரி சுமங்கலி
சிதம்பரி விடம்பரி சிலாசுத விலாச விமலி
கொத்து திரிசூலி திரிகோணத்தி
ஷட்கோண குமரி கங்காளி ருத்திரி
குலிச ஓங்காரி ரீங்காரி யாங்கரி வூங்காரி
ரீங்காரியம்மா முத்து காந்தமணி
முக்குண துரந்தரி மூவர்க்கு முதல்வி
ஞான முதுமயக் கலைவாணி
அற்புத புராதனி மூவுலகுமான சோதி
சக்தி சங்கரி நீலி கமலி பார்வதி
அழகான பிட்டியில் புகழாக அமர்ந்திடும்
சக்தி பத்திரகாளி உமையே!

06. பெற்றதாய் நீ உள்ளமட்டும் தான் குபேரற்கு
பெரும் மார்க்கண்டனாவேன் பிறவிப் பெருங்கடலை
நீந்திக் கரைகண்டு பேரின்ப வீட்டில் வாழ்வேன்
மற்ற தாய் தன்னை கனவிலும் நினைவிலும் மறந்தேன்
என்னு மதியனம்மா மனப்பால் தனப்பால் குணப்பால்
அருந்தாது மெய்ஞானமான உமைபால் குடிப்பேன்
உற்றதாய் எல்லா உயிர்க்கும் ஒரு தாயாக
உலகுமாதாவுமாக ஒருதாயும் உன்போல்
இருப்பதாகக் கேட்டிலேன் உறுதி முழுவதும் உண்மை
கற்றதா நான் எண்ணிவிட்டதா
நீ எண்ணிவிட்டதா கைவிடாது அருளல் வேண்டும்
காட்சிநிறை ஆட்சிபெற
பிட்டியம்பதியில் உறை சக்தி
பத்திரகாளி உமையே!

07. கொத்து மத்தொடு பவள உத்தாரம் உள்ள நீ
கோளமணி மார்பழகி நீ குக்கடக் கொடியுடைய
முருகோனை ஈன்றநீ குற்றுதன முள்ளவளும் நீ
சக்தி சிவசக்தி நவசக்தியென வந்த தங்கை
கண்ணகை அம்மன் நீ தாயவள் புலிமீது
மாயவன் தங்கையென தற்காக்க வந்த தாயே!
எத்திசையுமே துதித்து கண்டிகை சிந்தரி
உன்புதுமை எண்ணுதற்கு எளிதாகுமோ
காஞ்சி காமாட்சிநீ மதுரையில் காளி நீ
மதுரையில் மீனாட்சி நீ காமாட்சி சக்தி உமை நீ
கன்னலொடு செந்நெல் விளைகின்ற
பிட்டிநகர் சக்தி பத்திரகாளி உமையே.

08. ஆரணத்துபநிடத அக்கரத் தொனியாகி ஆகாச வட்டமாகி
அறுகோணம் இருகோணம் முக்கோணம் நாற்கோணமாகி
நிறமைந்துமாகி காரணத்துருவாகி அருவாகி ஒளியாகி
காக்கும் உன்பெருமை எளிதோ கருணைப் பிரவாக
ஆனந்த வெள்ளம் கசிந்தூறு பேராளியே ஏரணத்தீ
பிட்டியம்பதிதன்னில் சிறந்துமேவும் யாமள சௌந்தரி
கோமள சொரூபவர ராசபர ஈஸ்வரியே
எனை வந்தருளும் தாரணி நாரணனுக்கு ஒரு சகோதரி
நாகமணி உம்பரவர் பாகமுறு
மேகசிவ பத்திரகாளி அம்மையே.

# வீரபத்திர சுவாமி பாடல்கள்

01. அம்பலத்தில் ஆடுகின்ற அரன் சோதிக்கு
அம்புலியில் அவதரித்த மாவீரா
பிட்டியம்பதியில் வளர்
பத்திரகாளி அம்மைதனில்
அன்புகொண்ட வீரபத்திரா
நெல்வயல்சூழ் அழகுமிக்க
சங்கரத்தை ஊரில் உள்ள
அடியார்கள் உய்யவென்று
சிவசக்தி ஆகிநிற்கும் பெருமானே
அடியனுக்கும் தினதருளைத் தரவேணும்

02. அரன்தனக்கு அன்புமிக்க சேயே நின்
அன்புபெற்ற அடியார்கள் பாதுகாவே
பிட்டியம்பதியில் வளர் முதல்வோனே
பிராட்டிதனில் அன்புமிக்க வீரபத்திரா
தக்கனையும் வதம்செய்த அதிவீரா
தக்கோர் மனதில் விளையாடும் சோதி
ஆயிரம் முகங்கள் திகழ் அருளோனே
அடியனையும் ஆண்டுகொள்ளும் பெருமானே..



# பிட்டியம்பதி உறை பத்திரகாளி சமேத வீரபத்திரர் புராணம்


## காப்பு

பிட்டிப் பதியில்வளர் பத்திரகாளி அம்மை
அன்புமிக்க நாயகன் வீரபத்திரன் - புகழோங்கு
புராணமதை நேயமுடன் எடுத்தியம்ப
தும்பிமுகன் காப்பதாமே.

## புராணம்

வீரபத்திரக் கடவுள் வாழ்க!
வித்தகர் செம்மல் தாழ் வாழ்க!
பத்தினிக் கன்புசெய் பரனே வாழ்க!
பாவலர் உள்ளத்து ஒளியே வாழ்க!
பண்பும் குலமும் ஒருங்கே திகழும்
பெருமையினார் மரபின் வழியே வாழ்க!
மண்ணில் செந்நெல் மிகவே பொலியும்
பிட்டியம்பதியில் திகழ்வோய் வாழ்க!
சங்கரர் மரபுசெய்த தவத்தின் பயனே வாழ்க!
புளியினில் கோயில் கொண்டோய் வாழ்க!
மன்னர் வழிவரும் மாண்புறு முதன்மையினார்
கட்டிய நிழலில் நிலைத்தோய் வாழ்க!
எந்நெஞ்சில் நீங்கா ஓமே வாழ்க!
என்செவியில் ஒலிக்கும் ஒலியே வாழ்க!
என் கண்ணில் திகழும் ஒளியே வாழ்க!
என் நாவில் ஊறும் அமுதே வாழ்க!
என் சிந்தையில் நீங்காச் சித்தே வாழ்க!
என் ஆணவம் அழிக்கும் அருளே வாழ்க!

அன்பர் உள்ளத்தில் அகலா திருப்போய் வாழ்க!
பொன்னும் பொருளும் துச்சமென்ற
தூயருளத்தின் சோதிப் பொருள் வாழ்க!
தீயவழித் தக்கன் ஆணவம் அழித்தோய் வாழ்க!
ஆயிரம் முகங்கள் கொண்ட எம்பரனே சரணம்
வட்டுநகர் வாழ் பக்தர்கள் வணங்கும் சேவடி சரணம்
சீரிய வழிவரும் பூசுரமாரும் பக்தியோடு
இன்மலர் கொண்டு போற்றிடும் திருவடி சரணம்
பக்கத்திருக்கும் சித்திரப்பாவை பத்திரகாளிப்
பத்தினியம்மை திருவடி சரணம்
சரணம் சரணம் நின்பரிபுர பதங்கள்
சரணம் சரணம் என்றுமே சரணம்.



# போற்றிப் பதிகங்கள்

பிட்டியம்பதி வளர் பிரானே போற்றி!
பேரருள் புரிந்திடும் பிராட்டி போற்றி!
நாடினோர்க் கருள்பொருள் ஆனாய் போற்றி!
நன்னில மதனைத் தேர்ந்து நயம்பல புரியும் வண்ணம்
புளியினில் விஸ்வரூபம் கொண்ட எம்பரனே
உன்னை விடுவனோ தாராய் அருள்.
பூசுரர்மார் சந்ததியும் வட்டுநகர் வாழ்பவரும்
சுற்றுமுள அயலூர்வாழ் பக்தர்களும் தொழுதேத்த
சுத்தசக்தி மங்கையொடு பல்லோர்க்கும் வாழ்வுமிக
தேர்ஓடும் நெல்வயல்சூழ் பிட்டிவளர் பதிபோற்றி.

**"இயலிசைவாரிதி" "கவிமாமணி" "கலாரத்னா" "கலாபூஷணம்"**
**"மஹாவித்துவான்"**
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் M.A.-J.P**
**அவர்களால் பாடப்பெற்ற பாடல்கள்**

# கீர்த்தனைகள்

## காப்பு

துணவி விநாயகர் ஸ்துதி

இராகம் : ஹம்ஸத்வனி — தாளம் : ஆதி

### பல்லவி

துணைநீயே துணவி விநாயகனே! - உந்தன்
இணையடிகள் துணையே இறைவியைப் பாட அருள்

### அனுபல்லவி

கணமும் உனை மறவேன் கணபதியே அருள்
மணமலர்ச் சங்கரத்தை மாதாவைப் பாட அருள்

### சரணம்

01. பத்திர காளி அன்னை பதம்பாட அருள் வீர
பத்திர - ரின்மலர்ப் பாதமும் பாட அருள்
எத்திசையும் போற்றும் எழிற் சங்க ரத்தைத் தலப்
பிட்டியம் பதியுறை பிராட்டி பிரானைப் பாட

02. பக்தியுடன் பத்திரகாளிப் பைந்தமிழ்ப் பாடல் அருள்
சித்திபுத்தி நாயகனே சேவடிகள் பிடித்தேன்
முத்தமிழ் அவ்வைபாட முத்திகொடுத்த தேவா!
அத்தி முகத்தவனே அடிமலர் சரணடைந்தேன்.

# ஸர்வலோக சக்தி

இராகம் : கல்யாணி  தாளம் : ஆதி

**பல்லவி**

ஸர்வலோக சக்தியே - சரணம்
பர்வத ராஜகுமாரி பத்ரகாளி

**அனுபல்லவி**

தர்மஸம் வர்த்தனி தாரிணி பூரணி
கா்மபாபம் தீர்க்கும் கல்யாணி கருமாரி

**சரணம்**

01. பஞ்ச கிருத்தியங்கள் பரமசிவனும் செய்ய
மிஞ்சும் சக்தியளித்து மிளிர்ந்திடும் ஆதிசக்தி
சஞ்சலம் தீராயோ சங்கரத்தைத் தேவீ!
பூஞ்சாகஷ ரியேதாயே பத்ர காளி நீயே!

02. வயல் சூழும் பிட்டியம் பதிவாழும் பத்ரகாளி
வியனருள் வீரபத்ரர் விரும்பிடும் ஸ்ருங்காரி
கல்விழிக் கண்ணழகி கருணாகரி காளீ!
பயபக்தி யுடன்தொழுதோம் பதமருள வாராகி.

# அம்மா உனக்கு நமஸ்காரம்

இராகம் : மோஹனம் தாளம் : ஆதி

**பல்லவி**

அம்மா உனக்கு நமஸ்காரம் - தாயே!
மும்மூர்த்திகள் தொழும் மோஹனப் பத்ரகாளி

**அனுபல்லவி**

இம்மாநி லத்தில் பிட்டியம்பதிச் சங்கரத்தைப்
பெம்மான்வீர பத்திரரின் பேரின்ப நாயகியே!

**சரணம்**

01. ஸௌந்தர்ய லஹறி ஸாம்பவ பத்ரகாளி
அந்தரி சுந்தரி அகிலாண் டேஸ்வரி
செந்தமிழ்ச் சங்கரத்தை செழும்வயல் சூழும்பதி
சுந்தரப் பிட்டியம் பதியில் உறைபவளே

02. நின்பாதம் கதியன்றி நிலத்தில் துணையு முண்டோ?
அன்பாலே ஆதரிக்கும் அன்னையும் நீ அல்லவோ?
உன்பாதம் தொழும் அன்பர் உயர்ச்சி பெற அருளும்
பண்பாலே உயர்ந்தவளே பத்ரகாளித் தாயே!

# பூங்காவனச் சங்கரத்தைப் பிட்டியம்பதித் தாயே!

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

### பல்லவி

மஹாமந்த்ர ஸ்வரூபிணி! - காளி!
பாதாரவிந்தம் அருள் பத்ரகாளித் தேவீ!

### அனுபல்லவி

ஜெகாநந்த சிருங் காரவிலாசினி - அம்ப
மஹாதேவன் மகிழ் மாலினி சூலினி

### சரணம்

01. ஓங்காரி யேஉமா ரீங்கார வண்டிசைக்கும்
பூங்காவனச் சங்கரத்தைப் பிட்டியம் பதித்தாயே!
ஆங்காரியே கௌரீ ஆனந்த பைரவியே!
பாங்கான சங்கரத்தைப் பத்ரகா ளியே அருள்

02. பிரான்வீர பத்திரரின் பிரியம னோஹரி
அராவணி பூண்பவளே அகிலாண் டேஸ்வரி
புராதனப் பிட்டியம்பதிப் புளித்தலம் கோயில் கொண்டாய்
சராசரம் தனையீன்ற சாம்பவி பத்ரகாளி

# உன் கோயில் மணியொலிக்க உள்ளம் உருகுதம்மா

இராகம் : தோடி                                    தாளம் : ஆதி

**பல்லவி**

உன்கோயில் மணிஒலிக்க உருகுதம்மா!
நினபாதத் தாமரையை நெஞ்சம்சர ணடையுதம்மா!

**அனுபல்லவி**

நென்மணி வயல்சூழும் நன்னகர் சங்கரத்தை
மன்னும்பிட்டி யம்பதியில் மகிழ்ந்து உறைபவளே!

**சரணம்**

01. அகிலலோக மாதா அன்னையே பத்ர காளீ!
மகிமை தமிழிற்பாட மனமும் உருகுதம்மா!
சகலலோகம் துதிக்கும் சாமுண்டி திரிசூலி
மகிதலம் தனிலுந்தன் மலரடி பூஜை செய்யும்

02. சக்தி உன் சம்பந்தத்தால் சித்திபெறு வானேசிவன்
அத்துவிதங் கடந்த தத்துவ மானவளே!
முத்திக்கு வித்தான முழுமுதற் பொருள் நீயே!
சக்தி தருபவளே சங்கரத்தைப் பத்ர காளீ!

# சரணமலர் அருள்வாய் சங்கரத்தைத் தாயே!

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

**பல்லவி**

சரணமலர் அருள்வாய் சங்கரத்தைத் தாயே!
பிரமனும் ருத்திரனும் அரியவனும் ஏத்தும்

**அனுபல்லவி**

பரமசிவன் என்றும் பஞ்சகிருத்யம் செய்ய
அரனவனுக்கு கருளும் அம்பிகே பத்ர காளீ!

**சரணம்**

01. கழனி சூழும் எழில் கவின்பதி சங்கரத்தை
அழகியே பத்ரகாளி அன்னையே நீயே கதி
கழலடி சரணமடைந்தேன் கருணாகரி ஆதரி
உழவர் தொழும்தேவி உமையே பத்ர காளி

02. சைவம் கொழிக்கவும் சங்கரத்தை செழிக்கவும்
வையகத்திலே இளம் தொண்டர் பணிந்து நின்றார்
உய்யும் வழியருளும் உத்தமியே பத்ர காளி
அய்யன்வீர பத்திரனும் அமர் பிட்டிப்பதித் தேவி!

# நெக்குருகி நின்பதம் பாடினேன்

இராகம் : ஸிந்துபைரவி    தாளம் : ஆதி

**பல்லவி**

நெக்குருகி நின்பதம் பாடினேன் - தாயே
திக்குவேறில்லை யம்மா திருப்பிட்டியம் பதித்தேவி!

**அனுபல்லவி**

பக்கமெல்லாம் நெற்கதிர்கள் பத்ரகாளியுனை வணங்கும்
தக்கதுணை நீயேஅம்மா உனைச் சரணடைந்தேன்

**சரணம்**

01. கரமலர் தளிர்ச் சூலமேந்தும் மாயே!
தரணி தனிலே உந்தன் தாமரைப் பதந்தாராய்
வரமருளியே நல்ல வாழ்வுதரு பவள்நீயே!
புரச்சங்க ரத்தைப்பிட்டி யம்பதி வாழ்பவளே!

02. வாசலிலே வந்தே வாயாரப் பாடித் தொழ
நேசமுடன் அருளும் நிமலியே பத்ரகாளி
பூசனைகள் புரியப் புளங்காங்கிதமும் கொள்வாய்!
வீசும் காந்தக் கண்ணழகி விரிமலர்ப்பதந் துணையே!

# புரமான சங்கரத்தை பரிபூரணி

இராகம் : பாகேஶ்ரீ　　　　　　　　　　தாளம் : ஆதி

**பல்லவி**

பரதேவதையைத் துதி மனமே - தமிழ்ப்
புரமான சங்கரத்தைப் பரிபூரணி காளி

**அனுபல்லவி**

திரிசூலி அபிராமி தீன தயாபரி
அரிமாயன் சோதரி அம்மை பத் திரகாளி

**சரணம்**

01. உலக மாதா அவளே உமையவளும் அவளே
சகலசக்தி அவளே சங்கரத்தை வாழ்பவளே
பலகலை கல்வியருளு பத்திரகாளி அவளே
இகமதில் பிட்டியம் பதிவாழ் கருணாகரி

02. இந்துஇளைஞர் கூடி இறைவியின் தொண்டு செய்ய
சுந்தரி பத்ரகாளி சுப மங்களம் அருள்வாள்
பந்தமுடன் அவளைப் பாடிப் பக்தி செய்ய
வந்தருள்வாள் அன்னை வரங்களும் தந்தருள்வாள்

# பக்தியாய்ப் பூஜைசெய்யப் பரவசமாகிடுவாள்

இராகம் : பெஹாக் தாளம் : ஆதி

**கண்ணிகள்**

01. மங்கையர் மகிழ்ந்திட மாங்கல்ய பாக்கியம்
சங்கரத்தைப் பத்ரகாளி தந்திடுவாள்
பொங்கிடும் பேரின்ப பேறான மதலைவரம்
அங்கயற் கண்ணிகாளி அளித்திடுவாள்

02. குங்குமம் மஞ்சளும் குலவிடும் பொன்னணிகள்
தங்கிட வரம்தருவாள் பத்ர காளி!
எங்கணும் இன்பமே இறைஞ்சிடச் செல்வமெலாம்
தந்திடுவாள் எங்கள் பத்ர காளி!

03. செந்நெல் செழித்திடச் செம்பொன் கொழித்திடச்
செல்வமெல்லாம் தருவாள் பத்ரகாளி!
வண்ணவெண்பால் பொங்கச் சின்னத்தடாகமதில்
வரவழைத்தவள் அன்னை பத்ரகாளி!

04. பக்தியாய்ப் பூஜைசெய்ய பரவசமாகியே
சித்தியும் தருபவள் பத்ரகாளி!
இத்தரையில் சங்கரத்தை இலங்கு பிட்டியம்பதிச்
சக்தியுமானாள் எங்கள் பத்ரகாளி!

05. ஸகலஸௌ பாக்கியங்கள் இகமதிலே அருளி
அகமகிழ்ச்சி தருவாள் பத்ரகாளி!
புகலரும் தெய்வீகப் புளித்தலச் சங்கரத்தை
இகமதில் கோயில் கொண்டாள் பத்ரகாளி!

# நித்தியம் அம்பிகையின் நிழல் நினைந்து துதி

இராகம் : பூபாளம் தாளம் : ஆதி

**பல்லவி**

சக்தி பூஜை செய்வாய் - மனமே
பத்திர காளி அம்மை பதமலர் போற்றி நிதம்

**அனுபல்லவி**

நித்தியம் அம்பிகையின் நிழல் நினைந்து துதி
சித்தியும் தந்திடுவாள் சிற்பரை தயாநிதி

**சரணம்**

01. பக்தியுடன் திரிகரண சுத்தியுடனே பரா
சக்தி உமையவளைச் சந்ததமும் பணிவாய்
வித்தை செல்வம் வீரம் பத்ரகாளி நல்கிடுவாள்
இத்தரையில்பூபாலர் இறைஞ்சிடும் பத்ரகாளி

02. பிட்டியம் பதித்தலத்தில் புளியமர நிழலில்
அட்டியலும் மாங்கல்யம் அரவும் அணிவாள் காளி
கட்டியவள் பாதமலர் கதியெனவே துதிப்பாய்
மட்டிலா மகிழ்ச்சிநல்கி மங்களம் தானருள்வாள்

# சங்கரத்தை வளரும் சாம்பவி

இராகம் : கரஹரப்ரிய                                    தாளம் : ஆதி

பல்லவி

ஹரஹரப் ரியமான காமஸ்வ ரூபினி
பரதேவதே மாதா பத்ரகாளி அருள்வாய்

அனுபல்லவி

சிரமதிலே சிவந்த சடையனற் குழல் விரித்தே
அரவம் அணிந்த தாயே அடிமலர்ப் பதம் துணையே!

சரணம்

01. ஸ்ருஷ்டிஸ்திதி சங்காரம் திரோதனம் அநுக்ரஹம்
அருள்சிவன் பஞ்சகிர்த்யம் ஆக்கும் திறன் அளித்தாய்!
திருஷ்டியருள்தேவி தீனதயாபரி
கிருஷ்ணனின் சோதரியே கிருபாக டாஷம் அருள்

02. சங்கரத்தை வளரும் சாமுண்டி பத்ர காளி!
பொங்கரவம் அணியும் பூரணி ஆரணி
மங்களம் அருள்பவளே மாதங்கி ஈஸ்வரி
பங்கஜப் பாதமலர் பாலித்த ருள்செய்வாய்

# கனகசுத்தியுடனே கழலடி பாட அருள்!

இராகம் : நாதநாமக்ரிய  தாளம் : ஆதி

### பல்லவி

எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் - ஏழைநான்
பக்தியுடன் உன்னைப் பாடித்துதிக்க அருள்

### அனுபல்லவி

அத்தன் சிவன் அணைக்கும் அம்பிகே பத்ரகாளி
நித்தம் உனதுபத நிழல் பணிந்த நாளும்

### சரணம்

01. காரணசுத் தியுடனே கழலடி பாட அருள்
புரச்சாங்க ரத்தைவளர் பிட்டியம் பதித்தேவி
திரிசூலம் ஏந்திடும் திரிபுர சுந்தரி
அரிஅவன் தொழுதிடும் அன்னையே பத்ரகாளி

02. குளக்கேணி பாலாகிக் குளிந்தோட வைத்தனை
களத்துமேட் டினில்செந்நெல் பொலிந்திட வைத்தனை
புளித்தரு நிழலில் புளிக்குடில் கொண்டனை
அளித்திடுவாய் அருள் அன்னையே பத்ரகாளி!

# உன்னைப் பாடித் தொழுவதல்லால் உண்டோ வேறுவேலை?

இராகம் : ஆபெரி                                        தாளம் : ஆதி

**பல்லவி**

தாமரைப் பூம்பாதம் தந்தருள்வாய் - தாயே
சோமன் அயன்அரி சேவிக்கும் பத்ரகாளி!

**அனுபல்லவி**

பூமகிழ் பூம்பதி பிட்டியம்பதி உறையும்
சாமகானப்ரியே சாமுண்டி சாம்பவி

**சரணம்**

01. உன்னைப்பாடித் தொழுவதல்லால் உண்டோ வேறுவேலை
பன்னக பூஷணிநானும் பிடித்தேன் உந்தன்காலை
செந்நெல் கொழிக்கும்மலர் செழித்திடும் பூஞ்சோலை
வன்னப்பதி சங்கரத்தை வாழும் பத்ரகாளி

02. கல்விக்கலை வளர்க்கும் கவின்பதி சங்கரத்தைச்
செல்வியே பத்ரகாளி செந்தமிழ் பாடிடுவோன்
வல்லவினை தீர்த்தருளை வழங்கிடும் அன்னை நீயே
நல்லடி வேண்டிநின்றேன் நாளும் அருள்புரியாயோ!

# பரிந்தோடி வந்தருளும் பத்ரகாளியம்மா

இராகம் : தோடி தாளம் : ஆதி

**பல்லவி**

விரைந்தோடி வந்தேன் அம்மா! - உந்தன்
பதந்தேடி நிதம்நாடி சதம்மேவி இதம்காணப்

**அனுபல்லவி**

கரைந்தே என் ஆவியும் கதறிஅழுத என்னைப்
பரிந்தோடி வந்தருளும் பத்திர காளியம்மா!

**சரணம்**

01. எததனை எத்தனை இடர்கள் எதிர்த்தாலும்
அத்தனையும் நின்னருளால் அகற்றிடு வேனம்மா!
இத்தரை மீதினில் இருக்கும் ஓர் துணை நீயே
சத்து சித்து ஆனந்தச் சங்கரத்தைத் தாயே!

02. அம்மா தாயே என்று அ:டியேன் கதறுவதை
இம்மா நிலத்தில் கேட்டும் இரங்கமனம் இல்லையோ?
நம்மாதவத்தலம் நளின சங்கரத்தை
எம்மாதவப் பயனாய் எழுந்தருளும் தாயே!

# சிங்கவாகனத்தழகி சிலம்பொலிக்க நடந்து வந்தாள்

இராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி-திஸ்ரம்

**கண்ணிகள்**

01. புளியமர நிழலில்பாம்புப் புற்றருகே வீற்றிருந்தாள்
இளமுறுவல் பூத்துஎன்னை இனியதமிழ் பாடுஎன்றாள்
களிதவளும் கன்னித்தமிழ் கவிதை பாடி பக்திசெய்தேன்
அளவிலாத ஆனந்தத்தால் அகமகிழ்ந்தாள் பத்திரகாளி!

02. மங்களஞ்சேர் மாங்கலியம் மார்பிலாடப் பத்ரகாளி
பொங்கும் களிப்புடனே எந்தன் பூந்தமிழைக் கேட்டுநின்றாள்
சிங்கவாக னத்தழகி சிலம்பொலிக்க நடந்துவந்தாள்
அங்கையினால் அள்ளிஅருள் ஆனந்தத்தோ டெனக்களித்தாள்

03. சங்கரத்தை இந்துஇளைஞர் சால்புறுநற் றொண்டுகண்டு
இங்கிதஞ்சேர் பத்ரகாளி இன்னருளைத் தந்துநின்றாள்
பங்கமரும் வீரபத்ரர் பரிந்துநல் லாசிதந்தார்
மங்களங்கள் வீரபத்ரர் மாதாபத்ர காளி தந்தார்

04. திரிகரண சுத்தியோடு தெய்வத்தொண்டு செய்பவர்க்கு
அருளை அள்ளி வாரிவாரி அம்மைபத்ர காளி தந்தாள்
புளித்தலமாம் சங்கரத்தை பொலிந்திடத் தெய்வீகம் தந்தாள்
பரிவோடு பாரினிலே பலசித்திப் பேறும் தந்தாள்

05. வாழிபத்ர காளியெனத் தாயைவாழ்த்திப் பாடுவோம்
ஊழிஆடல் ஆடியவள் லோகநாத னைவென்றவள்
ஆழத்தமிழ்க் கடலுள்மூழ்கி அழகுக்கவி முத்தெடுத்து
நாளும் பக்தி வடத்தில்கோர்த்து நானும் அன்னை
பதம்புனைவேன்

# பரிபூரண சரணாகதி

இராகம் : சுபபந்துவராளி தாளம் : ரூபகம்

**பல்லவி**

பரிபூரண சரணாகதி யடைந்தேன் பத்ரகாளி!
புரியானசங் கரத்தைத்தலம் தனிலேவந்து தொழுதேன்

**அனுபல்லவி**

அரிசோதரி அரன்நாயகி அடிமாமலர் பணிந்தேன்
விரிமாமலர்ப் பதமேஅருள் திரிசூலியே அபயம்

**சரணம்**

01. சகலலோகந் தனைஈன்றவள் ஜெகதீஸ்வரி நீயே!
இகமீதினில் இணைமாமலர்ப் பதமேகதி தாயே!
புகல்வேறிடம் உண்டோ அம்மா புவிமீதில்நீ கதியே!
செகமீதில் எனைஆதரி சுமதீ பத்ர காளீ!

02. பதினாலுல கமும் அன்னையின் அன்பிற்கிணை உண்டோ?
பதிபிட்டியம் பதிவாழ்ந்திடும் மாதாநீயும் அல்லவோ?
அதிபாசமும் கொண்டேஎம்மை ஆதரிக்கும் அம்மா?
கதிநீயல்லால் புகல்வேறிடம் உண்டோபத்ர காளி!

# எடுத்தகாரியம் யாவினும் வெற்றி!

இராகம் : திலங் | தாளம் : ரூபகம்

**பல்லவி**

எடுத்த காரியம் யாவினும் வெற்றி!
கொடுத்திடு வாள்அன்னை பத்திர காளீ!

**அனுபல்லவி**

தொடுத்த தமிழ் மலர் ஆரமவள் பதத்தைப்
பிடித்துநீ சூட்டிப் பிராட்டியைத் துதிப்பாய்!

**சரணம்**

01. மங்களத் தலமாம் சங்கரத் தைத்தலம்
துங்கமணிக்கோவில் துலங்கும் வாசலில்நின்றே
அங்கவளைத்துதி அருளும் அவள் தருவாள்
பங்கஜ நேத்திரத்தால் பாலித்திடு வாள்காளி

02. தலப்பிட்டி யம்பதித் தாயைத்தினம் துதி
மலர்ப்பதமே கதி மங்களம்தரும் சுமதி
அவர் மதிமுகத்தவள் ஆனந்தி பத்ர காளி
நிலந்தனில் திண்மைமிகும் நம்பிக்கை யோடுபணி

# சங்கரத்தைப் பத்திரகாளி வரும் உலா!

இராகம் : பிருந்தாவனஸாரங்க　　　　தாளம் : ஆதி

### பல்லவி

பங்குனி மஹோற்ஸவத் திருவிழாவாம் - அன்னை
சங்கரத்தைப் பத்திரகாளி வரும் உலாவாம்

### அனுபல்லவி

பொங்கல்ப டைத்துப்பூசைப் பெருவிழாவாம் - அங்கே
மங்களக்கொடியேற்றும் மணவிழாவாம்.

### சரணம்

01. ஆனைவாக னத்தில்ஏறி அம்பாள் வீதி வருவாளாம்
அடியார்க்கு நல்லருளை அள்ளி அள்ளித் தருவாளாம்
ஞானக்குதி ரையிலேறி இவள்வருவாளாம் - சக்தி
ஞாலத்திலே ஞானம் அள்ளிகொடுப்பாளாம்

02. சப்பரத்தில் பத்ரகாளி வருவாளாம் - அன்னை
சகலசெள பாக்கியங்கள் தருவாளாம்
தெப்பக்குள நீர்பாலாய்ப் படைப்பாளாம் - அந்த
திருவிழாவை தரிசிக்கவே கோடிபக்த ஜனத்திரளாம்.

# சித்திரத்தேர் மீதிலேறிப் பத்ரகாளி வந்தாள்

இராகம் : மதுவந்தி | தாளம் : ஆதி

### பல்லவி

சித்திரத்தேர் மீதிலேறிப் பத்ரகாளி வந்தாள்
வித்தகனாம் வீரபத்திர அண்ணலோடு வந்தாள்

### அனுபல்லவி

எத்திசையும் சக்தி பக்தர் பக்தியினால் ஆடச்
சித்தமதில் பத்ரகாளி சிந்தனையில் வந்தார்

### சரணம்

01. காவடிகள் கோடிகோடி கோயில்வீதி ஆடும்
பூவடியின் புகழைப்போற்றிப் பக்தர்குழாம் பாடும்
ஆவலாய்க் கற்பூரச்சட்டி அனற் ஜுவாலை கமழும்
பாவளங்கள் பாடும்பக்தர் பரவசமும் திகழும்

02. அங்கப்பிர திட்டைசெய்து அடியர் பக்தி பொங்க
சங்கரத்தைப் பத்ரகாளி சரணம் பக்தர் நாட
இங்கிதஞ்சேர் நாதஸ்வர தவிலிசையும் முழங்க
சங்கரத்தை ஊர்கூடி பொங்குவடம் இழுக்க.

# பக்ஷம்நிறை பத்ரகாளி பாசம்நிறை தாயல்லவோ!

இராகம் : அடாணா தாளம் : ஆதி

## பல்லவி

சிங்கவாக னத்திலேறி செங்கை வாளும்கையிலேந்தி
சங்கரத்தைப் பத்ரகாளி சங்கரித்தாள் மகிஷனையே!

## அனுபல்லவி

பொங்கும் அனல்தெறிக்கவே செங்கண்தணல் பொறிக்கவே
பங்கம் தந்தமகிஷனைப் பத்ரகாளி சங்கரித்தாள்

## சரணம்

01. ஆணவம் மமதை என்னும் அசுரனாம் மகிஷனும்
நாணி வாழைமரத்துள்ளே நாடிப்புகுந்தொளித்தனன்
பேணும் தெய்வப்பூம்பதி பிட்டியம் பதித் தேவி
வேணுமாலயன் வியக்க வீறுகொண்டே எழுந்தாள்

02. துஷ்டநிக் கிரஹம் துரிதமாக வேசெய்தாள்
அஷ்டலக்ஷ்மி போற்றும் ஆனந்த பத்ரகாளி
இஷ்டதெய்வ பத்ரகாளி இன்பஅருள் சுரந்திடுவாள்
பஷமுள்ள பத்ரகாளி பாசம் நிறைதாயல்லவோ!

# கரம் அசைத்து அபயம் தந்தாள்

இராகம் : தேஷ் தாளம் : ஆதி

### பல்லவி

பச்சைமடிச் சேலைகட்டி பச்சைவட மாலை சூடி
இச்சையோடு தேரிறங்கி வந்தாள் அன்னை பத்ரகாளி

### அனுபல்லவி

மெச்சிடவே சங்கரத்தை மேவும் கோயில் வாசலிலே
கச்சிதம்சேர் கரம் அசைத்தே அபயம் தந்தாள் பத்ரகாளி!

### சரணம்

01. கண்ணழகி பத்ரகாளி காந்தவிழிப் பார்வையினால்
வண்ணவண்ண அருள்மலரை வாரிச்சொரிந்தாள் அன்னை
அண்ணலவர் வீரபத்ரர் அருகிருந்து ஆசி நல்க
எண்ணமதில் வீற்றிருந்தாள் எங்களன்னை பத்ரகாளி

02. அள்ளி அள்ளிச் செந்தமிழின் அழகுமுத்துப் பாமலர்கள்
தெள்ளு தமிழ் இசையிற்பாட தேவிபத்ர காளி தந்தாள்
துள்ளும் தாளநடைகள் துள்ளதேவிநெஞ்சம் சிலிர்த்து நின்றாள்
வெள்ளைப்பால் குடாகக்கரை மேவும்பத்ர காளிஅம்மை

# மங்களம்

இராகம் : சுட்டி தாளம் : ஆதி

**பல்லவி**

சங்கரத்தைக் காளித்தாய்க்கு ஜெயமங்களம்
தங்கவீரு பத்திரர்க்குச் சுப மங்களம்

**அனுபல்லவி**

ஐங்கரன் கணபதிக்கும் ஆறுமுக வேலருக்கும்
பங்கமரும் வள்ளிதேவ குஞ்சரிக்கும் மங்களம்

**சரணம்**

01. சக்திபத்ர காளிக்கும் ஸரஸ்வதி லக்குமிக்கும்
அத்திரச் சன்டேசருக்கும் அநந்தகோபன் கண்ணனுக்கும்
நித்தியம் பூஜைசெய் சுரருக்கும்
பக்தியுடன் தொழும்காளி பக்தருக்கும் மங்களம்

02. சங்கரத்தைத் தலத்திற்கும் சாரும் பிட்டியம்பதிக்கும்
எங்கள்குல தெய்வமென்று ஏத்தித்தொண்டு செய்பவர்க்கும்
சங்குவயல் சூழும்ஊராம் சங்கரத்தை நன்னகர்க்கும்
மங்களம்சேர் ஆசிநல்கும் மாதாவுக்கும் மங்களம்.

சுபம்.

(சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கீர்த்தனைகள் முற்றும்)

உ

கௌரி அம்பாள் துணை

# கேதார கௌரி காப்பு



## நேரிசை வெண்பா

முன்னின்று செய்யும் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளையாய்
சொற்குற்றமோடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற்கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகாதேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லவோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அனைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்றுப் படலமதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்
- காட்டிடுவாய்

காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளையற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்த புகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரும்

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்ட தெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்த தெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றும் இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீறுமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்கு கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டறிந்தால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள் வரையில் இசையோடு விரதமிகு
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர் பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
இச்செகத்திலுள்ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கிமிக வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

(முற்றும்)

# எலுமிச்சை பழம் பூசை பாடல்

எலுமிச்சை விளக்கினை ஏற்றி வைத்தோம்
இந்த பூவுலகில் எம்மை காத்திடுவாய்
எத்துணை இடர்வரினும் ஏற்றிடுவோம் - இனி
எம்துணை உலகில் நீயல்லவோ (எலு)
சொத்து சுகங்களும் நிலைப்ப துண்டோ இந்த
மானிட ஜென்மமும் நிலைப்ப துண்டோ
சுத்த புத்தியுடன் உனைத்தொழுதால் வாழ்வில்
மொத்த பவனிவரும் உண்மை யன்றோ (எலு)
நித்த நித்தமுன்னைத் தொழுது வந்தால் வாழ்வில்
புத்தம் புதுசுவை பெருகுமன்றே
மாந்தர்கள் போற்றிடும் துர்க்கையம்மா அருள்
மந்திர நகர்வாழ் துர்க்கையம்மா (எலு)

# ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு மானவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இத்தமண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்காதாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத்தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
உலகையீன்றவள் துர்க்கா உமையானவள்

உண்மையானவள் எந்தன் உயிரைக்காப்பவள்
நிலவில் நின்றவள் எந்தன்நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்பு தந்தையுமானவள்

இமையானவவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படலும் கொம்பவள்
பண்புபொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
துன்பமற்றவள் துர்க்கா தூய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவுள்
நம்மை தாங்கிட என்றுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருஆவியாமாயவள்
திருநீற்றில் என்னிடம் நிகழும் திருஆவிமாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
ராகு தேவனின் பெரும்பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத்தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே எந்தனை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீருக்கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கையே துர்க்கை
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

## கொடிக்கவி பாடுதல்

திருக்கோவில்களில் கொடியேற்ற வைபவத்துடன் பெருவிழா ஆரம்பமாகும். கொடிக்கவிப் பாடலுடன் கொடியேற்றம் நிகழும். சிதம்பரத்தில் உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவி பாடினார். ஏறாத கொடிச்சீலை தானாக ஏறிய அற்புதம் நிகழ்ந்தமை இங்கு நினைவுகூரத்தக்கது.

### கட்டளைக் கலித்துறை


01. ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலோன் றொளிக்கு மெனினும் இருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த் தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

### நேரிசை வெண்பா

02. பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியே திரவே தருளாளா
நின்புரவா வையமெல்லாம் நீயறிக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

03. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள்நல்கக் கோடி.

04. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடன் பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.







TwinStar IT Unit, Main Street, Chanknanai.